# நியாய, சைவசித்தாந்த மெய்யியல்களில் அறிவு பற்றிய ஆராய்ச்சி ஓர் ஒப்பீட்டாய்வு

# (A Comparative Research on Knowledge in Nyaya and Siva Siddhanta philosophy.)

**தி. செல்வமனோகரன்** விரிவுரையாளர், சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். tselvan@univ.jfn.ac.lk

**Abstract:**

Philosophy is based on epistemology. It is a search for truth. Nyaya is considered to be the first philosophy in Indian philosophy to present the study of knowledge on the basis of logic. It accepted the Vedas but was initially materialistic. The materialist-based search for truth addresses the 'Vada' principles as 16 elements. It thus logically advanced the inquiry into knowledge. Driven by its appeal, other Indian philosophies adopted and rejected the concepts of Nyaya Darsha and presented their own unique intellectual thought. Justice is inevitable and the world has become ideological in accordance with the news. Among the Indian philosophies, it was the later Saivism that presented the three-object argument and placed it on a logical basis on the scientific ground. On that basis, this study compares and examines the discourse of knowledge in both philosophies. Did the two philosophies engage in dialogue about knowledge to advance their respective ideas? If so, how they were formed is taken as the research problem here. The purpose of this study is to compare and analyze the two philosophical ideas about knowledge. These two philosophies have not been extensively compared and examined in the scientific field. Therefore, this study will help the comparative study of future philosophers. In this study comparative method is mainly used and descriptive and historical research methods are used as needed

**Keywords :-** Knowledge , Saivaism , Nyaya, Epistemology , Logic.

**அறிமுகம்**

கருவிக் கையாட்சியும் மொழிப் பயன்பாடும் மனிதனை தனித்து அடையாளப்படுத்தியவையாக மனிதனை, மனிதனாக உணரச் செய்தவையாக எடுத்துரைக்கப்படுகின்றன. இவை மனிதனிடம் அறிவு நிலைப்பட்ட தன்மையையும் அறிவு பற்றிய பிரக்ஞையையும் தோற்றுவித்தன. மனித குல வரலாற்றின் செந்நெறிப் பாங்கில் மெய்யியலுக்குத் தனியிடமுண்டு. மெய்யியலின் முக்கிய பிரிவு களாக உள்பொருளியல் (Ontology) அல்லது பௌதிகவதீதவியல் (Metaphysics), மதிப்பியல் (Axiology) அறிவாராய்ச்சியியல் (Epistemology) என்பன சுட்டப்படுகின்றன. (Kandaswamy, S.N., 2000:01) மெய்யியல் என்பது உண்மை பற்றிய தேடலாக, உண்மை அறிவு பற்றிய விசாரமாக எடுத்தாளப்படுகின்றது. மனிதரின் பகுத்தறிவு இயற்கையாகவே ஆராய்ச்சி மனப்பாங்கை விருத்தி செய்துவிடுகின்றது. அவ்வாராய்ச்சி செம்மையான சிந்தனைக்கு உரியதாக அளவையியல் சார்ந்த அறிவாக, அறிவாராய்ச்சியியலாக வளர்ந்து மெய்யியலாகிவிடுகின்றது.(ஞானகுமாரன்,நா., 2017: 02) இது அறிவின் தோற்றம் (Origin), இயல்பு(Nature), உண்மை (Truth ), வரம்புகள் (Limits) முதலியவற்றைக் குறித்து எழுகின்ற பிரச்சினைகளை ஆராய்கின்றது. (இராமானுஜாச்சாரி, இர., 1966:01)

பிரபஞ்சம், பிரபஞ்ச உற்பத்திப் பொருட்கள் பற்றிய மெய்யியலாளர்களின் கருத்து நிலைகளே உண்மை - பொய் பற்றிய உரையாடல்களாக அறிவாராய்ச்சியியலாக வளர்ச்சி பெற்றன. உண்மை என அங்கீகரிக்கப்பட்ட, கருத்தை அல்லது விடயத்தை ஐயுறுவதிலிருந்தே மெய்யியற் பிரச்சினைகள் உருவாக்கம் பெறுகின்றன. நம்பிக்கைகள் மெய்மையானவை என நிறுவப்பட்டாலன்றி அவை அறிவு எனும் மதிப்பீட்டைப் பெறமுடியாது. இந்த அடிப்படையில்தான் அறிவானது அறிவின் தோற்றத்தைச் சார்ந்தது, அறிவின் உண்மையைச் சார்ந்தது என இரண்டாகப் பிரித்து ஆராயப்படுகிறது. ஆயினும் இவை யாவும் அறிவாராய்ச்சியியலாகவே பொதுவில் எடுத்தாளப்படுகின்றன. இதனாலேயே மெய்யியலும் அறிவாராய்ச்சியியலும் ஒன்றை ஒன்று சார்ந்ததாக, உண்மையறிவுத் தேட்டத்தில் ஒன்றன்றி மற்றொன்று செயற்பட மாட்டாததாகத் திகழ்கின்றன. (Montague,W.P.,1925:32-33) அறிவாராய்ச்சியியலின் அறிதல் முறைமைகளை உரைப்பது அறிவாராய்ச்சியியலாகவும் (way of knowing) உள்ளதன் முறைமைகளை விளக்கியுரைப்பது மெய்யியலாகவும் (way of Being) விளக்கப்படுகிறது. அறியப்படுவதற்கும் அதனை அறிகின்ற அறிவுக்கும் இடையே உள்ள இணைப்புத் தொடர்பாக எழுகின்ற சிக்கலுக்கு விடை காணுதலரிதாகும்.

இதன்வழி நின்றே மெய்யியலாளர்கள் அறிவை அதன் மூலங்களை, எல்லைகளை, அறிகை வாயில்களை ஆராய முற்படுகின்றனர்.

**நியாயதரிசனத்தில் அறிவு**

'நியாய" எனும் சொல் முறையானது 'என்றும் சரியான அறிதல்' என்று பொருள் கொள்ளப்படுகின்றது. இச்சொல் குறித்த ஒரு விடயத்தை அல்லது பொருளைச் சரியான அறிவுக்குச் சாதனமாக்குகின்ற அளவைகளின் துணைக் கொண்டு பரீட்சிக்கும் செயல் முறையாக விளக்கப்படுகின்றது. (சட்டோபாத்யாயா, தேவிப்பிரசாத், 2016:335) இந்திய மெய்யியல்களில் அறிவு பற்றிய ஆராய்ச்சியை, இந்திய தர்க்க சாஸ்திரத்தை நிறுவியதாக நியாயதரிசனமே குறிப்பிடப்படுகின்றது. அதற்கு நியாயம் மூன்று உறுப்புகளை முதன்மைப்படுத்துகிறது. அறிகருவியைப் பயன்படுத்திப் பொருட்களை அறிபவன் இருத்தல் வேண்டும் அவனே பிரமாதா, அறியப்படும் பொருள் பிரமேயம் , அறியப் பயன்படும் கருவி பிரமாணம் எனப்படும். பிரமாதா, பிரமேயம், பிரமாணம் என்னும் இம்முப்பொருளும் 'திரிபுடிசம்வித்' என அழைக்கப்படுகின்றன. நியாயம், பிரமாணம் எனும் அளவைகளாக காட்சி, அனுமானம், உபமானம், ஆப்தம் என்னும் நான்கு அளவைகளை ஏற்று நிற்கின்றது.

வேதத்தையும் கடவுளையும் பற்றிக் கூறியிருந்தாலும் கூட கௌதமர் நியாய சாஸ்திரத்தை உண்மை அறிவு பற்றிய தர்க்கவியற் தளத்திலான .ஆராய்ச்சியாகவே முன்வைத்துள்ளார். நியாய அறிவாராய்ச்சியியல் பௌதிகவதீதத்துக்கு இடமளிக்கவில்லை. பிரபஞ்சம், பிரபஞ்சப்பொருட்கள் மற்றும் அவை முத்தொழிற்படுதல் தொடர்பான 'அணுவாதம்' இதனையே நிறுவுகிறது.

இந்திய வேதப் பாரம்பரியத்தின் ஞானப் பகுதியாக விதந்துரைக்கப்படும் உபநிடதங்கள் அத்தியாத்மவித்தையாகிய ஆத்மஞானத்துக்கும் அதன் மோட்சத்துக்குமே முதன்மையளிக்கின்றன. ஆனால் நியாயதரிசனம் இவற்றுக்கு முதன்மையளிக்கவில்லை. மாறாக பிரபஞ்ச விசாரத்திற்கு முதன்மையளிக்கிறது. நியாயசாஸ்திரம் பதினாறு பதார்த்தங்களை முன்வைக்கின்றது. அவை அறிவு, அறிவுற்பத்தி, அதன் பரப்பெல்லை, இவ்வறிவு விசாரத்துக்கான மூலக்கூறுகள் மற்றும் வாயில்கள் என்பவற்றை உள்ளடக்கியவையாக வாத அடிப்படைக் கூறுகளாக அமைந்துள்ளன.

இவை குறித்த விடயம் தொடர்பான அறிவுபூர்வமான தர்க்க அடிப்படையிலான ஆராய்ச்சியாக, உண்மையை அறிதலுக்கான படிநிலைச் செயற்பாடுகளாக

அமைந்துள்ளன. இதனாலேயே இது நியாயவித்தியா, ஆன்வீக்ஷக் எனும் பெயர்களைப் பெற்ற தரிசனமாயிற்று. இதன் பொருள்முதல்வாத அறிவாராய்ச்சியியல் போக்கு, காலதேச வர்த்தமானத்துக்கேற்ப மாறுபட, வாத்சாயனர் கருத்துமுதல்வாதத் தளத்துக்கு அழைத்துச் சென்று விடுகின்றார். இதனை காங்கேசர் மேலும் வலிதுடையதாக்கினார்.

அறிவு அல்லது அறிவாற்றல் என்பது பயம் (உபலப்தி) அல்லது உணர்வு (அனுபவம்) என வரையறுக்கப்படுகின்றது. (Indrojit, 2019:1) அறிவு மெய்மைவாத நியாய தரிசனம் அறிவு வேறு, பொருள் வேறு என்றும் பொருள்களுக்கிடையிலான வேறுபாட்டை அறிவது அறிவு என்றும் எடுத்துரைக்கின்றது. அறிபவருக்குரிய அனைத்து அறிவும் பொருட்களின் வெளிப்பாடு என விளக்கிநிற்கிறது. விளக்கானது அதன் முன் வைக்கப்பட்டுள்ள பொருட்களைக் காட்சிப்படுத்துவது போல அறிவானது அனைத்துப் பொருட்களையும் வெளிப்படுத்துகின்றது.

ஆக, நியாயம் அறிவு தனக்கு முன் வருகின்ற பொருட்களை வெளிப்படுத்துகின்றது என்கிறது. உரையாடல்களாக, வினாவிடைகளாக இருந்த அறிவு பற்றிய கருத்தாடலை விவாதமாக மாற்றிய தரிசனம் இதுவாகும். நியாயம், அதன் அறிவாராய்ச்சியியல் - தருக்கவியல் திறத்தால் ஏனைய மெய்யியலாளர்களால் காலங்காலமாக உள்வாங்கப்பட்டது. காங்கேசரின் நியாயம் சார்ந்த செயற்பாடுகள் புத்துயிர்ப்பளித்தாலும் பிற்கால மெய்யியல்களாலும் உள்ளீர்க்கப்பட்டு தன் தனித்துவத்தை மெல்ல மெல்ல இழந்துவிட்டது.

**சைவசித்தாந்தத்தில் அறிவு**

இந்திய மெய்யியல் வரலாற்றில் சைவ மெய்யியல்களில் ஒன்றான சைவசித்தாந்தம் தனக்கெனத் தனிப்பாரம்பரியத்தை உடையது. சைவசித்தாந்தம் “சிவசம்பந்தத்தின் முடிந்த முடிவு” என்று கூறப்படுகிறது. ஆரம்ப காலத்தில் சைவாகமங்களே சித்தாந்தங்களாக எடுத்தாளப்பட்டன. (திருவிளக்கம், மு.,(உரை), 2010:267) வேதத்தின் அந்தம் வேதாந்தம் போல, ஆகமத்தின் அந்தம் ஆகமாந்தம்; அதுவே சைவசித்தாந்தம் என்பர். இதன்வழி ஆகமத்தின் ஞானம் பற்றிய கருத்தியலாக சைவசித்தாந்தம் சுட்டப்படுகின்றது. உள்பொருளின் உண்மைத்துவம் பற்றிய சிந்தனையில் சங்கரர், இராமானுஜர் ஒருமை வாதத்தையும், மத்துவர் இருமை வாதத்தையும், பௌத்தர் கணபங்க வாதத்தையும் முன்வைக்க சித்தாந்திகள், “பதி, பசு, பாசம்” எனும் முப்பொருட்களை ஏற்றுப் “பன்மைவாதத்தை” எடுத்துரைப்பர்.

இந்திய மெய்யியல்களுள் காலத்தால் பிந்திய சைவசித்தாந்தம் இதர மெய்யியல்களின் பலம், பலவீனங்களைப் புரிந்து கொண்டு தன் பன்மை வாதத்தை முன்வைத்துள்ளது.

நியாயம் கூறுகின்ற பிரமாதா, பிரமேயம், பிரமாணம் என்ற மூன்று உறுப்புகளையும் சைவ சித்தாந்தம் ஏற்றுக் கொள்கின்றது. இம்முப்பொருளும் செயலின்றி இருப்பின் பயனில்லை. அறிதல் எனும் செயல் நிகழ்தல் வேண்டும். அது பிரமிதி எனப்படுகின்றது. அறிதல் செயலின் விளைவு பிரமா எனும் அறிவு எனப்படுகிறது. இவ்வைந்துறுப்புக்களும் அறிவாராய்ச்சியின் முக்கிய உறுப்புக்களாகத் திகழ்கின்றன.

சைவசித்தாந்தமானது தர்க்க அடிப்படையிலான மெய்யியலாகக் காணப்படுகின்றது. வேதவியாசர் கூறும் பத்தளவைகளையும் வழிமொழியும் சித்தாந்திகள் “காட்சி, அனுமானம், ஆப்தம்” (திருவிளக்கம், மு.,(உரை), 2010:07) எனும் மூன்றளவைகளுக்கும் முதன்மை கொடுப்பதோடு மீதி ஏழு அளவைகளையும் அதனுள் அடக்கி நிற்பர். “ஜோன்பீற்”, “மெய்கண்டார் நிபுணத்துவம் இரு அடிப்படையிலானது. அவை முறையே சுருக்கமாகச் சொல்லுதல், தர்க்க அடிப்படையில் சொல்லுதல் என்பன” (Piet, John H., 1952:2) எனக் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது. தமிழில், சிவஞானசித்தியாரே சைவசித்தாந்த அளவை பற்றி முதலில் கூறிய சாத்திரநூலாகும். அளவைகள் வழி மெய்யியலை எடுத்துரைக்கின்ற அதேவேளை, “ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுள்ளன எங்கள் சோதி”(3ஆந்திருமுறை, பா.5) என்றும் உரைத்துள்ளமை சைவசித்தாந்தத்தின் தர்க்க நிலைப்படையைக் காட்டுகின்றது.

**ஒப்பீடு**

இந்திய அறிவாராய்ச்சியியல் நூலறிவு, அனுபவ அறிவு எனும் இரண்டையும் ஏற்று நிற்கிறது. இந்திய பொருள்முதல் வாதத்தினர் அனுபவ அறிவுக்கே முதன்மை கொடுப்பர். அனுபவத்துக்குட்படாத, அனுபவம் கடந்த, உண்மை அறிவு உண்டு என்ற கருத்தியலை கருத்துமுதல்வாதிகள் முன்வைப்பர். அது வேதாகம நூல்களின்வழி வரும் அறிவாகச் சுட்டப்படும். அவை புலன் கடந்த பொருட்களை அறியும் அறிவாம். அளவைகளால் அளந்தறியத்தக்க பௌதிகப் பொருட்களை அறிவது ‘அறிதல்’ என்றும் பௌதிகத்தைக் கடந்த - அளவைகளால் அளந்தறிய முடியாதவற்றை அறிதல் என்பது ‘உணர்தல்’ என்றும் சைவசித்தாந்தம் விளக்கி நிற்கிறது. (சிவானந்தமூர்த்தி,க.,2014:104) இங்கு அனுபவம் என்பது புலன் கடந்த

அனுபவத்தையும் உள்ளுணர்வையும் உள்ளடக்கும் அகலித்த பொருளில் கையாளப்படுகின்றது.(கிருஷ்ணராஜா,சோ.,1995:3) நியாய அறிவாராய்ச்சியியல் புறப்பொருள் பற்றிய அறிவுக்கு முதன்மை கொடுக்க, சைவசித்தாந்தம் பௌதிகத்தின் வழி பௌதிகவதீதத்துக்கு முதன்மை கொடுக்கிறது. பிரபஞ்ச அறிவு அல்லது புலனறிவானது புலன் கடந்த அறிவைப் பெற 'விடிவாமளவும் விளக்கனைய' (திருவருட்பயன், 1980:40) உதவும் என்று கூறுகின்றது. இறைவனை அடைதலாகிய சுத்தாத்துவித முக்தியே அதன் இறுதி இலக்காகும். சடவாதத்தைப் பின்தள்ளி ஆன்மவாதத்தைச் சைவசித்தாந்தம் முன்னிறுத்துகிறது.

'நான் யார்?' என்ற வினாவிற்கு விடை காணமுயலுகின்ற உபநிடத ஆன்ம விசாரணைகளின் வழி அறிவுக்கு முதன்மையளிக்கும் மரபை சைவசித்தாந்தமும் ஏற்று நிற்கின்றது. ஆன்மாவின் குணமாக அறிவை எடுத்துரைக்கின்றது. பதி முற்றறிவினன்; ஆன்மா சிற்றறிவினன், பதி சத்து ; பாசம் அசத்து; பசுவாகிய ஆன்மா சதசத்து; ஆன்மா அறிவிக்க அறிவது; அறிவு அதன் குணம் எனச் சைவசித்தாந்தம் விளங்குகின்றது. இவ்வாறான கருத்தியலை நியாயவாதிகள் முன்வைக்கவில்லை. அணுக்களின் சேர்க்கையே யாவற்றையும் தீர்மானிக்கிறது என்கின்றனர். ஆன்மா அறிவுடையதெனில் மயங்கி நிற்பது ஏன் என வினவின் பாசத்தால் பீடிக்கப்பட்டு பசுத்துவம் உடையதாய் இருளுக்குள் அகப்பட்டதாய் உடலுடன் கூடி அறியாமையின் பாற்பட்டு நிற்கும். அதனால் நனவில் கண்டவற்றை தினந்தோறும் கனவிலே மாறி அறிகின்றதாகி விடுகின்றது.(திருவருட்பயன், 1980 :14) அதேவேளை அறியாமையால் கன்மங்களைச் செய்து பிறவியெடுக்கும் ஆன்மா, பிறவி நீங்கவும் பேரறிவாளனான இறைவனை அடையவும் எடுக்கும் முயற்சி உடலுடன் கூடிய நிலையிலேயே நிகழ்கிறது. இதனை, "விடிவாமளவும் விளக்கனையமாயை வடிவாதி கன்மத்து வந்து" (திருவருட்பயன், 1980:30) என உமாபதி விளக்குகிறார். சைவசித்தாந்தம் சூரியனின் ஒளி கிட்டுமளவும் இருளில் பயணிக்க சிறு விளக்கு உதவுவது போல இப்பிரபஞ்ச ஞானம் (பாச ஞானம்) ஆன்மாவுக்கு உதவும் என்கிறது.

அறிவின் தோற்றம் பற்றிய கருத்தாடலில் நியாய தரிசனம், ஆத்ம, உடல் இணைப்பை அடிப்படையானதாகக் கொள்கின்றது. உடலில் அறிவுப் புலன்கள் அமைந்துள்ளன. இவ்வறிகைப் புலன்கள் பொருந்தினாலன்றி ஆத்மா உணர்வைப்பெற முடியாது என நியாயசாத்திரம்( Sudarsanasharya Punjabi, (ed.), 1922: I;.1.14) விளக்குகின்றது. சைவசித்தாந்தமும் இதனை ஏற்று 'பொறியின்றி ஒன்றும் உணராப் புந்தி'

(சிவபாதசுந்தரம்,சு.,(உரை),1980:15) என ஆன்மாவின் அறிவுப் புலன்களை அடையாளப் படுத்துகின்றது. பிராசீன நியாயம் (ஆதிகால நியாயம்) பொறிவழிப் பெறும் அறிவை முதன்மைப்படுத்துகின்றது. சைவசித்தாந்தம் அதனை பிரபஞ்ச ஞானமாகிய பாச ஞானம் எனக் கீழான அறிவாக எடுத்துரைக்கின்றது. நியாயத்தில் அது அறிவுக்கான முதன்மை வழியாகவும் அறிவு பற்றிய ஆராய்ச்சியாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய கருத்துமுதல்வாதிகளைப் போல பிரபஞ்சமும் பிரபஞ்சவுற்பத்திப் பொருட்களும் மாயை – தோற்றம் - இன்மை என உரைக்காமல் அவற்றைச் சைவசித்தாந்தம் உண்மைப் பொருள்களாகக் கொண்டு தோன்றி நின்று ஒடுங்கி மீளத் தோன்றுவன எனவுரைப்பதும் அறிவுத் தோற்றவியலுக்கான முதற்கருவியாக அவற்றை கருவதும் அதன் தனித்துவமான மெய்யியல் அம்சமாகும். சட்டோபாத்தாயா, மிருணாள் காந்தி காங்கோபாத்தாயா போன்ற இந்திய மெய்யியலாளர்கள் இந்திய கருத்துமுதல்வாதம் பற்றிய கருத்துக்களை வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்டே அணுகியுள்ளனர். அவர்கள் சைவசித்தாந்தத்தை அறிந்திருந்தமைக்கான எந்தக் குறிப்பும் அவர்களது நூல்களிலில்லை. ஆதலால் அவர்களைப் போன்ற வடஇந்திய அறிஞர்கள் முன்வைக்கும் இந்திய கருத்துமுதல்வாதம் சார்ந்த விமர்சனங்கள் அல்லது குற்றச்சாட்டுக்கள் சைவசித்தாந்தத்துக்குப் பெரிதும் பொருந்தவில்லை என்பதை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும்.

மோட்சத்தை அடைதல் எனும் இலக்கை உடையதாகிய சைவசித்தாந்தம் நால்வகைப் படிநிலைகளை முன்வைக்கின்றது. புறவுடலுடன் தொடர்புபட்ட சரியை, புறவுடலும் அகமும் தொடர்புபட்ட கிரியை, அகத்தை அடிப்படையாகக் கொண்ட யோகம், அகத்துக்கும் அப்பால் செல்லும் ஞானம் என்பவை அவை. அவற்றுள் ஞானமே மேனிலையானதாக அறிவார்ந்த நிலையாகச் சுட்டப்படுகின்றது.( திருவிளக்கம், மு.,(உரை), 2010:270, 277) ஞானத்தைப் பெறுதல் என்பது தொடர்பாக நான்கு செயல் நிலைகள் சுட்டப்படுகின்றன.

“கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தலென ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்” (திருவிளக்கம், மு., (உரை),2010:276)

எனும் வரிகள் ஞானத்தையடைதலுக்கான படிநிலைகளாக கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்பவற்றை எடுத்துரைக்கின்றன. விடயத்தைப் புலன்வழி அறிதல் கேட்டல், கேட்ட விடயத்தைக் கிரகித்து அதனைப் பற்றி செய்யும் ஆராய்ச்சி

சிந்தித்தல், சிந்தித்ததன் வழி ஏற்படுகின்ற முடிவு தெளிதல், தெளிந்த உண்மையோடு ஒன்றித்து நிற்றல் நிட்டை கூடல்; இங்கு நிட்டையே உயர் ஞானமாக – ஞானத்துள் ஞானமாக எடுத்துரைக்கப்படுகிறது. அந்த உயர் ஞானவழி நிட்டை கூடலுக்கான உண்மைப் பொருள் எது எனும் வினாவுக்கு சைவசித்தாந்தம் முற்றறிவினனான பதியை முன்னிறுத்துகின்றது. இவ்வாறான விளக்கம் நியாய அறிவாராய்ச்சியியலில் இல்லை. இந்திய மெய்யியலாளரான சர்வ பள்ளி இராதாகிருஷ்ணன் புலனறிவு அல்லது காட்சியறிவு, தர்க்கவியலறிவு அல்லது புலமைத்துவவறிவு, உள்ளுணர்வறிவு மூவகையறிவுகளைச் சுட்டுகிறார். (Srineevasa, Rao., S. S.,978:96) இவ்வகையீட்டில் முதலிரு வகையறிவுகளும் புறவகையறிவாக அமைய உள்ளுணர்வறிவு அகவறிவாக அமைகிறது. உள்ளுணர்வறிவே மேலானதாகவும் கொள்ளப்படுகிறது. இவ்வகையீட்டில் இராதாகிருஷ்ணன் சைவசித்தாந்தத்தை கவனத்திற் கொள்ளாதுவிடினும் (அவர் தனது நூல்களில் சைவசித்தாந்தத்தைக் குறிப்பிடவில்லை) அது நியாயத்தைப் போல சைவசித்தாந்தத்திற்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது.

இந்திய மெய்யியல் மரபு பொதுவில் ஞானத்தை பரஞானம், அபரஞானம் என இரண்டாக எடுத்தாள்கிறது. பரஞானம் புலன் கடந்த அறிவாகவும் அபரஞானம் புலனறிவாகவும் சுட்டப்படுகிறது. கருத்துமுதல்வாதிகள் பரஞானத்தையே உயர் ஞானமாகச் சுட்டுகின்றனர். நியாயம் ஆரம்பத்தில் அபரஞானத்தையே உயர் ஞானமாகச் சுட்டினும் வாத்சாயனருக்குப் பின் ஏற்பட்ட மாற்றங்களும் நவ்ய நியாயத்தின் உருவாக்கமும் பரஞானத்தை முதன்மைப்படுத்தின. சைவசித்தாந்தம் இரு ஞானங்களையும் ஏற்கின்றது. அபரஞானம் பதமுக்திக்கும், பரஞானம் பரமுக்திக்கும் இட்டுச் செல்லும் என்கிறது. அந்த அடிப்படையில் அது பாசஞானம், பசுஞானம், பதிஞானம் மூவகை ஞானங்களை முன்வைக்கிறது. ஆன்மாவானது சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனும் நால்வாக்குகளின் விருத்தியாகிய சூக்கும பரிணாமமாகிய சொற்பிரபஞ்சம் மற்றும் நாதம் முதல் பிருதிவி ஈறாகவுள்ள தத்துவங்களின் பொருட் பிரபஞ்சம் எனும் இரண்டினையும் சார்ந்து நின்று அறிகின்ற அறிவே பாசஞானம் ஆகும். இவை வேதங்கள், ஆகமங்கள், உள்ளிட்ட உலகியற் சாத்திரங்கள், தத்துவ ஆராய்ச்சிகளின் வழி வரும் நூலறிவு, அனுபவவறிவு என்பவற்றால் ஏற்படும் அறிவாகும். இவ்வகை அறிவுக்கே - சடப்பொருள் வழி வரும் அறிவுக்கே நியாயம் முதன்மையளிக்க, சைவசித்தாந்தம் இதனைச் செயற்கையறிவு எனக் கீழ்நிலை ஞானமாக உரைக்கிறது.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்பன கருவிகளென அறிந்து பின் இறைவனைப் பற்றி ஆராய முற்படும்போது “நான்” எனும் தன்முனைப்பினால் ஆன்மாவிடம்

ஏற்படுகின்ற அறிவு பசு ஞானம் அல்லது உயிரறிவு எனப்படுகிறது. இது அத்வைதிகள் கூறுகின்ற "நானே பிரமம்'' என்கிற பொய்யறிவு ஏற்படக் காரணமானதாகக் கூறுவர். இது இயற்கையறிவு எனப்படுகிறது. (திருவிளக்கம், மு.,(உரை), 2010:247) நியாயவாதிகளின் உள்ளுணர்வினால் வரும் அறிவு எனும் கருத்தியல் இதனை ஒத்ததாகும். இவ்விரு அறிவுமே உண்மை அறிவென்றும் இவையே கடவுளை அறியவும் மோட்சத்தை அடையவும் உதவுமென நியாயவாதிகள் உரைக்கின்றனர். மோட்சத்துக்கு இறுதிக் காரணம் தத்துவஞானமாகிய உண்மை அறிவே என்பதில் இருசாராருக்கும் கருத்து வேறுபாடில்லை. ஆனால் எது உண்மையறிவு என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. மேற்சுட்டிய பிரபஞ்ச அறிவு (பாசஞானம்), உள்ளுணர்வு அறிவு (பசுஞானம்) எனும் இரு அறிவுகளுமே மோட்சத்தை, பேரின்பத்தை, தூய்மைநிலையை அஞ்ஞான நீக்கத்தைத் தருகின்ற உண்மைஞானங்களாக, நியாயவாதிகள் சுட்டுகின்றனர். (Dvivedin, P., (Eds): iv.2.1)

ஆனால் சைவசித்தாந்தம் பாச, பசு, ஞானங்களை கீழ்மையான – அபர ஞானங்கள் என்றும் இவை மீள்பிறவியைத் தரக்கூடிய பதமுக்திக்கே இட்டுச் செல்லும் என்றும் கூறுகின்றது.''பாசமா ஞானத்திலும் படர்பசு ஞானத்திலும் ஈசனை உணரவொண்ணாது''(திருவிளக்கம், மு.,(உரை),1919:85) எனும் வரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இவற்றுக்கு மேலாய் உயர் ஞானம் ஒன்றுண்டு. பவமதனை அறமாக்கும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகவும் உணர்வரிய மெய்ஞ்ஞானமாகவும் சித்திரிக்கப்படுகின்ற பதிஞானத்தை சைவசித்தாந்தம் முன்வைக்கிறது. இது "ஆவி ஈசனடி கூடல் இறைஞானம்''(சிவஞானதீபம்,1965: 154) எனப்படுகிறது. இதன்வழி பரஞானம் சித்திக்கும். இதற்குப் பத்து செயல் நிலைகளைச் சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. அவை தசகாரியம் எனப்படும். அவையாவன தத்துவரூபம், தத்துவ தரிசனம், ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி , சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனப்படுகின்றன.

முப்பத்தாறு தத்துவங்களாலான பிரபஞ்சத்தினதும் பிரபஞ்ச உற்பத்திப் பொருட்களினதும் வடிவத்தைக் (ரூபம்) கண்டு, அவை மாயாகாரியமென அறிந்து (தரிசனம்) அவற்றினின்றும் நீங்குதல் (சுத்தி) முக்கியமாகும். பிரபஞ்சப் பற்று நீங்க இறையருளினால் உண்டாகிய ஞானத்தைத் தான் (ரூபம்) எனக்கண்டு, தான் கண்ட ஞானத்துக்கே செயல், தன் செயலென எதுவுமின்றித் தானும் ஞானமுடன் நின்று (தரிசனம்), தான் கெட்டு பரமானந்தப் பொருளோடு ஒன்றல் (சுத்தி) எனும் நிலைகள் எடுத்து முக்கியத்துவம் பெறுகின்றன.

ஆன்மாக்களுக்காக ஐந்தொழில் புரியும் இறைவன் உயிருக்குயிராய் திருவடி ஞானமாய் நின்று அறிவுப்பாதை - திருவருளை இடமாகக் காணுதல் சிவரூபம் என்றும் பாச, பசு, ஞானங்களை விடுத்து அறிதற்கரிய சிவப்பேறான பரமானந்தத்தைச் சேர்தல் சிவதரிசனம் என்றும் உண்மையையுணர்ந்து அகமும் புறமும் சிவத்துடன் கூடி நிற்றலே சிவயோகம் என்றும் சிவம் ஆன்மாவுடன் யாவுமாய் நின்று நானாவித விடய போகங்களையும் சிவபோகமாகவே செய்து பேதமற நின்றுதானாக்கி, பரமானந்தத்தைப் பொசிப்பித்தல் (அனுபவித்தல்) சிவபோகம் என்றுமசைவசித்தாந்தம் விளக்குகிறது. இவ்வாறான கருத்தாடல்கள் நியாயதரிசனத்தில் இல்லை. மோட்சம் பற்றிய கருத்தாடலில் இத்தரிசனம் பல குறைபாடுகளோடு இருக்கின்றமையே இதற்குக் காரணமாக இருக்கலாம். 'உணர்வறிவு, மகிழ்ச்சி, வேதனை, விருப்பு, வெறுப்பு, தூண்டல், தர்மம், அதர்மம், வினை என்பவற்றை விடுதலே மோட்சம்' எனப்படுகிறது. இங்கு 'அறிவும் விடுபடுதல்' என்பது நூதனமானதே. சைவசித்தாந்தத்தைப் பொறுத்தவரை உயர் ஞானத்தால் சிவபோகம் சித்திக்கிறது என்பது அறிவுக்கு அது அளிக்கும் தர்க்க ரீதியான முதன்மையாகின்றது.

**முடிவுரை**

இந்திய மெய்யியல்களில் அறிவாராய்ச்சியியல், வேத காலம் தொட்டு நிலவி வந்தாலும் அதனை ஒரு கோட்பாட்டுத் தளத்தில் ஆராய்ந்த மெய்யியல் நியாயம் ஆகும். அதன் அறிவாராய்ச்சியியல் - தர்க்கவியல் தளத்தில் நின்று ஏனைய இந்திய மெய்யியல்கள் தமக்கேற்ற கருத்து நிலைகளைப் பெற்றுக்கொண்டன. சைவசித்தாந்தமும் அதற்கு விதிவிலக்கல்ல. அதேவேளை நியாய கருத்தியல் தளத்தில் இருந்து மாறுபட்டு பன்மைவாத - கருத்து முதல்வாதமாகத் திகழும் சைவசித்தாந்தம் தனக்கேயான அறிவாராய்ச்சியியல் சிந்தனை மரபை உருவாக்கிக்கொண்டது. மோட்சம் அடைவது பற்றிய கருத்தியலில் நியாயம் கூறும் அறிவை கீழ்நிலை அறிவாகக்கொண்டு தனது மோட்சம் பற்றிய கருத்து நிலைக்கேற்ப மேலான அறிவாக பதிஞானத்தை எடுத்துரைத்து அதனூடாக பேரின்பத் திளைப்பாக மோட்சத்தை கூறி நிற்கும் திறன் தர்க்க ரீதியில் சிறப்பானதாக அமைந்துள்ளது.

**உசாத்துணை**

ஆறுமுகநாவலர், (1967) ,*தர்க்கசங்கிரகமும் தர்க்கசங்கிர தீபிகையும்,* ஆறுமுக நாவலர்.வி. அச்சகம், சென்னை.

கிருஷ்ணராஜா,சோ., (1995), *சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல் ஓர் அறிமுகம்*, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

ஞானகுமாரன்,நா., (2017), *இந்திய அறிவாராய்ச்சியியல்*, சேமமடுபதிப்பகம், கொழும்பு.

சட்டோபாத்யாயா, தேவிப்பிரசாத், (2016), *இந்திய தத்துவ இயலில் நிலைத் திருப்பனவும் அழிந்தனவும்*, விடியல் பதிப்பகம், கோவை.

சிவபாதசுந்தரம் , சு., (உரை), (1980), *திருவருட்பயன்,* சைவ பரிபாலனசபை, யாழ்ப்பாணம்.

சிவானந்தமூர்த்தி, க., (2014), *சைவசித்தாந்தம் - தமிழர் மெய்யியல்*, அம்பாள் வெளியீட்டகம், புத்தூர்.

திருவிளக்கம், மு., (உரை), (1919), *சிவப்பிரகாசம்,* நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்.

திருவிளக்கம், மு., (உரை), (1919), *சிவஞானசித்தியார்,* சிவதொண்டன் நிலையம், யாழ்ப்பாணம்.

Dvivedin,P.,(Eds), (1920), *Nyaya Sutras by Gautama and with, Vatsyayana Bhasya*, Viswanatha's Vrtti, Benares.

Kandaswamy, S.N., (2000), *Indian Epistemology*, International Institute of Tamil Studies, C.I.T. campus, Chennai.

Indrojit, (2019), *knowledge and perception*, Indion philosophy,

Montague, W.P., (1925), *The Ways of Knowing*, George Allen and unwin, London.

Piet, John H., (1952), *A Logical Presentation of the Saiva siddhanta Philosophy*, The Christion Literature Society for India.

Srineevasa, Rao. G,S.S., (1978), *The Concept of being in Radhakrishnan an Tillie's, Indian Philosophical Annual, Vol.xii*, Madras University, Madras.

Sudarsanasharya Punjabi, (ed.), (1922), *Nyaya Sutras with Vatsyayana's bhasya and Prasannapada,* Bompay.